## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: **11/2026** நாள்: **29.01.2026**

### செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்.18/2025, நாள் 02.12.2025-இன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு, அறிவிக்கை செய்யப்பட்ட அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II பதவிக்கான முதல்நிலை தேர்வு 15.02.2026 முற்பகல் நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தேர்வர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவு தளத்தின் (OTR DASHBOARD) மூலமாக மட்டுமே அவர்களது விண்ணப்ப எண், பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து தேர்வுக்கூட நுழைவு சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்